பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை, வெளியீடு: ஆசிரியர், நாமக்கல் கவிஞர்.

ஸ்ரீ பியாரிலால்ஜியால் நடத்தப்படும் காந்தியடிகளின் ஆங்கிலப் பத்திரிகையை அனுமதியுடன் தமிழாக்கியது.

5 ] சென்னை—ஞாயிறு, மே 12, 1946. [ விலை அணா 2

## பிரார்த்தனைப் பிரசங்கம்

காந்தியடிகள், மந்திரி தூது கோஷ்டியார்க்கும் மகாஜனங்களுக்கும் ஆலோசகராக டில்லிக்கு வந்திருப்பதால் தம்முடைய ஆலோசனை சம்பந்தமாக எதுவும் வெளியிடுவது உசிதமில்லை என்று கருதித் தினந்தோறும் மாலையில் நடைபெறும் பிரார்த்தனைக் கூட்டங்களில் மட்டுமே உபன்னியாசம் செய்து வருகிறார். அந்த உபன்னியாசங்களில் ஒன்று வருமாறு :—

"பிரார்த்தனையானது ஆத்ம விமோசனத்தின் சாதனமாக இருப்பதோடு இகலோகத்தில் விடுதலை பெறுவதற்கான ஆயுதமாகவும் இருக்கின்றது. பெரிது கிடைக்கும் பொழுது சிறிதும் கிடைத்துவிடும். ஜனங்கள் தம்முடைய அஹிம்சா பலத்தைக் கொண்டே சுதந்திரத்தைப் பெற வேண்டுமானால், அவர்கள் ஞானியின் குணங்களை ஓரளவேனும் தங்களிடம் அபிவிர்த்தி செய்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

அந்த லட்சியம் ஞானிகளுக்கு மட்டுமேயன்றி எல்லோர்க்கும் சாதாரணமான பாமர மக்களுக்குங் கூட அவசியமானதே. மகாபாரதத்தில் கிருஷ்ண பகவான் அர்ஜுனனுக்குக் கீதையை உபதேசித்ததாகச் சொல்லுங் கதையில் வியாசர், கிருஷ்ணனைச் சாரதியாகவும், அர்ஜுனனை சாதாரண அறிவுள்ள குடியானவன் ஒருவனாகவுமே வர்ணித்திருக்கிறார்.

அப்படியானால் ஞானியின் லட்சணங்கள் யாவை? ஆமையானது தன்னுடைய உறுப்புக்களை தன்னுடைய ஓட்டுக்குள் அடக்கிக்கொள்வதுபோல், தன்னுடைய ஐம்புலன்களையும் பொருள்கள் மீது செல்லவொட்டாமல் தடுத்துக் கொள்ளுகிறவனே ஞானியாவான்.

எவனுடைய அறிவு நிலையாக இல்லையோ அவன் எளிதில் கோபத்துக்கும் தீய எண்ணங்களுக்கும் இன்னாச் சொற்களுக்கும் இடங்கொடுத்து விடுவான். ஆனால் அதற்கு மாறாக எவனுடைய அறிவு அசையாமல் நிற்கின்றதோ அவன் புகழையும் இகழையும் ஒன்றாகவே மதிப்பான். ஏச்சு மொழிகள் ஏசும் நாவை இழிவு படுத்துமேயன்றி ஏசப்பட்டவனை இழிவுபடுத்தா என்பதை உணர்ந்து கொள்வான். ஆதலால் ஞானியானவன் யாருக்கும் தீமை எண்ணமாட்டான், பகைவனுக்காகக்கூடக் கடைசிவரை கடவுளிடம் பிரார்த்தித்துக் கொள்வான்.

இந்த லட்சியம் அனுஷ்டிக்க முடியாத அளவு கஷ்டமானதா? இல்லை. அதற்குமாறாக இந்த லட்சியம் கூறும் ஒழுக்கமுறைதான் மனித ஜாதியின் பெருமைக்குத் தகுந்த ஒழுக்கமுறையாகும்.

இன்று நம்முடைய மனம், விஷயம் அறியாதபடியால் குழம்பிப் போயிருக்கின்றது. நாம் அறியாமையின் காரணமாகச் சண்டையிடவும் அக்கிரமங்கள் செய்யவும் ஆரம்பித்திருக்கிறோம். இப்படிப்பட்டவர்களுக்கு விமோசனமும் கிடையாது, சுயராஜ்யமும் கிடையாது. தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொள்வதாகிய சுயஆட்சி சுயராஜ்யத்துக்கு அஸ்திவாரமாகும்.

கீதையிலுள்ள சமஸ்கிருத ஸ்லோகங்களை எல்லோராலும் சரியாகப் பாராயணம் செய்ய முடியாமல் இருக்கலாம். ஆனால் ராம்துன் பாடுவதில் கலந்துகொள்வது எல்லோராலும் சாத்தியமான காரியம். எல்லோரும் சேர்ந்து தாளம் பிசகாமல் ராம்துன் பாடுவது பரம எளிய முறையில் பிரார்த்தனை செய்வதாகும்.

ஆனால் ஹிந்துக்கள் அல்லாதார் அதில் கலந்துகொள்வது எப்படி என்று கேட்கலாம். ராமநாம பஜனை ஹிந்துக்களுக்கு மட்டுமே உரியது என்று கூறியதைக் கேட்க எனக்கு வியப்பாக இருக்கின்றது. முஸ்லிம்களுக்கும் ஹிந்துக்களுக்கும் பார்ஸிகளுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் வேறு வேறு கடவுளா? இல்லை. எங்கும் வியாபியும் எல்லாம் அறிந்தவருமான ஒரே ஒரு கடவுள்தான் இருக்கிறார். அவரைத்தான் நாம் பல்வேறு நாமங்களால் துதிக்கிறோம். எந்த நாமம் நமக்கு பழக்கமானதாயிருக்கிறதோ அந்த நாமமே நம்முடைய நினைவில் இருந்து வருகிறது.

என்னுடைய ராமன்—நாம் பிரார்த்தனை செய்யும் ராமன் அயோத்தி அரசனாயிருந்த தசரதனுடைய புத்திரனான ராமன் அல்லன். என்னுடைய ராமன் இறப்பும் பிறப்புமில்லாதவன்—இணையற்றவன். அவனையேதான் வணங்குகின்றேன், அவனுடைய உதவியையேதான் நாடுகின்றேன், அப்படியேதான் நீங்களும் செய்யவேண்டும். அவன் எல்லோர்க்கும் உரியவன். ஆதலால் யாரும் அவனுடைய நாமத்தை உச்சரிக்க ஆட்சேபிக்கக் காரணம் கிடையாது. ஆனால் எல்லோருமே ராமநாமத்தை உச்சரிக்கவேண்டிய அவசியமில்லை. ஆனால் பிரார்த்தனையின் இசைக்கு இடையூறாக இல்லாதபடி தம்முடைய மனத்துக்குள்ளேயே "அல்லா" வென்றோ "குதா" வென்றோ உச்சரித்துக் கொள்ளலாம்.

மற்றொரு சமயம் தோத்திரப் பாடல் ஒன்று பாடப் பட்டதும் காந்தியடிகள் கூறினார் :—

"கடவுளால் காக்கப்படுகிறவனை எந்தச் சக்தியும் அழித்துவிட முடியாது என்று அந்தத் தோத்திரப் பாடல் உறுதி கூறுகின்றது. உலக முழுவதும் சண்டையிலும் சச்சரவிலும் மூழ்கி நிற்கும் இந்தச் சமயத்தில் அந்தப் பாடல் கூறும் இதோபதேசம் அதிகப் பொருத்தமானதாகும். யுத்தம் நின்று போனாலும்

அதை உண்டாக்கிய காரணங்கள் இன்னும் இருந்து கொண்டேதான் இருக்கின்றன. இப்பொழுதுள்ள நிலைமை சமாதானமன்று, மற்றொரு யுத்தத்திற்கு சந்தடியில்லாமல் செய்யும் ஆயத்தமே யாகும்.

டில்லியிலேயே சூழ் நிலையை நஞ்சாக்கிக்கொண்டிருக்கும், ஒருவரை யொருவர் குற்றஞ்சாட்டுவதையும் ஏசுவதையும் பயமுறுத்துவதையும் பாருங்கள். ஆனால் உங்களுக்கு மட்டும் கடவுள் நம்பிக்கை யிருக்குமானால் இந்தப் பயமுறுத்தல்கள் எல்லாம் உங்களைக் கொஞ்சமும் பாதிக்கமாட்டா. கடவுள் காக்கும்வரை உங்கள் தலையிலுள்ள ஒரு சிறு ரோமத்துக்குக் கூட தீங்கு ஏற்படாது. அகத்திலுள்ளபடியே புறத்திலும் நிகழும் என்ற ஆன்றோர் வாக்கியம் ஒன்று உண்டு. நீங்கள் நல்லவர்களாயிருந்தால் உலகம் முழுவதும் உங்களுக்கு நல்லதாகவே இருக்கும். அதற்கு மாறாக நீங்கள் எவரையேனும் தீயவராக எண்ணினால் அனேகமாகத் தீமையானது உங்களிடமே உளது என்று தீர்மானித்து விடலாம்."

சௌத்ரி கலிக்குஸ்மான் சாகேப் ஹிந்துக்களைப் பற்றித் துவேஷ முறையில் பேசியிருப்பதைக் குறிப்பிட்டுக் காந்தியடிகள் கூறியது :—

"சௌத்ரி சாகேபுக்கு என்னிடம் அதிக மதிப்புண்டு. ஆதலால் யாராவது வந்து அவர் ஹிந்துக்களை ஏசிவிட்டதாகக் கூறினால் நான் அதை நம்பவும், அவரைப்பற்றி வருத்தப்படவும் மாட்டேன். எப்படி நேற்றுவரை உடன்பறந்த சகோதரர் போல் இருந்தவர் திடீரென்று ஹிந்துக்களைத் துவேஷிப்பவராக மாறிவிட முடியும்? ஹிந்துக்களில் சிலர் தம்முடைய நடத்தையால் அவருக்குக் கோபமூட்டி நிதானம் இழந்து பேசும்படி செய்திருக்கலாம். அதுபோலவே இன்று சௌத்ரி சாகேப் என்னைச் சந்தித்தால், அவரிடம் நான் ஹிந்துக்கள் எல்லோரும் திடீரென்று கெட்டவர்களாக மாறிவிட்டதாக எண்ணுகிறீர்களா என்று கேட்டால், அவர் 'நான் அப்படிச் சொல்லவில்லையே, இதென்ன அபத்தம்' என்று சொல்லிச் சிரிக்கவே செய்வார். ஆதலால் நாம் பிறரைத் தீயவராக எண்ணவுங் கூடாது, பிறர் நம்மைத் தீயவராக எண்ணுவதாகச் சந்தேகிக்கவும் கூடாது. பிறர் கூறும் தீய செய்திகளுக்குச் செவி சாய்ப்பது நம்பிக்கையின்மையின் அறிகுறியேயாகும்."

மற்றொரு உபன்னியாசம் வருமாறு :—

கவிஞர் தம்மைத் தாமே ஆராயும் சமயத்தில் கூறுகிறார் :—

'அப்பா மனிதனே! ஏன் கடவுள் நாமத்தைப் பஜிப்பதை விட்டு விட்டாய். காமத்தையும் கோபத்தையும் ஆசையையும் துறந்து விடாமல் உண்மையை மட்டும் துறந்து விடுகிறாய். இதென்ன அனியாயம்! உபயோகமற்ற தம்பிடிகளைச் சேகரித்து வைக்கிறாயே யன்றி கடவுளின் அன்பாகிய விலை மதிக்க முடியாத ரத்னத்தைத் தேடுகின்றாயில்லை. அட முட்டாளே! ஏன் உன்னுடைய அகம்பாவங்களை யெல்லாம் விட்டுவிட்டு கடவுளுடைய அருளை நம்பி வாழக் கூடாது?'

இதன் பொருள், பணமிருந்தால் அதை உடனே எறிந்துவிட்டு மனைவி மக்களை வீட்டைவிட்டு வெளியே துரத்திவிடவேண்டும் என்பதன்று. இவைகளையெல்லாம் துறந்துவிட்டு, தன்னிடமுள்ளவற்றை யெல்லாம் கடவுளுக்கே அர்ப்பணம் செய்து, அவருக்குச் சேவை செய்யவே அவர் அருளியுள்ளவற்றை உபயோகிக்க வேண்டும் என்பதேயாகும். நாம் கடவுளுடைய நாமத்தை முழுமனத்துடன் பஜித்தால் நம்மிடமுள்ள காமம் பொய் முதலிய சகல துர்க்குணங்களும் தாமாகவே அகன்றுபோகும் என்பதும் அந்தப் பாடலின் கருத்தாகும்.

நாம் ஒவ்வொரு நாளும் பிரார்த்தனையின் ஆரம்பத்தில் பாராயணம் செய்கின்ற ஈசோபநிஷத்தின் முதல் ஸ்லோகத்தில் நாம் எல்லாவற்றையும் கடவுளுக்கு அர்ப்பணம் செய்து விட்டு நம்முடைய இன்றியமையாத தேவைக்கு வேண்டிய அளவுமட்டும் உபயோகித்துக் கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. முக்கியமான நிபந்தனை யாதெனில் பிறர் பொருளை இச்சிக்கக்கூடாது என்பதே. இந்த இரண்டு உபதேசங்களே ஹிந்து மதத்தின் சாரமாக இருக்கின்றன.

காலைப் பிரார்த்தனையில் பாராயணம் செய்யும் மற்றொரு ஸ்லோகம் 'நான் இகலோக ராஜ்யபாரமும் கேட்கவில்லை, தேவலோகம் போகவும் கேட்கவில்லை. நிர்வாணம் பெறக்கூடக் கேட்கவில்லை. நான் கேட்பதெல்லாம் துன்பமுற்றவர்க்குத் துன்பமில்லாமல் செய்யக்கூடிய சக்தியை மட்டுந்தான்' என்று கூறுகிறது. துன்பமானது உடலைப் பற்றியதாகவுமிருக்கலாம், மனத்தைப் பற்றியதாகவுமிருக்கலாம்; ஆன்மாவைப் பற்றியதாகவுமிருக்கலாம். ஆசாபாசங்கட்கு அடிமையாயிருப்பதால் உண்டாகும் ஆன்ம துன்பமே சில சமயங்களில் உடல் துன்பத்தைவிட கடுமையாக இருக்கும்.

ஆயினும் கடவுள் துன்பத்தை நிவர்த்தி செய்யத் தாமே நேரில் வருவதில்லை. மக்கள் மூலமாகவே காரியத்தைச் சாதித்துக் கொள்கிறார். ஆதலால் பிறர் துன்பத்தைப் போக்குவதற்கான சக்தியை அருளுமாறு கடவுளைப் பிரார்த்திப்பதன் பொருள் யாதெனில், அந்தச் சக்தியைப் பெறுவதற்காக நாம் ஆசைப்படவும் உழைக்கவும் வேண்டும் என்பதேயாகும்.

அப்படிச் செய்யும் பிரார்த்தனை எவரையும் விலக்குவதில்லை; எல்லோரையும் சேர்த்துக்கொள்ளவே செய்கின்றது. அதற்குச் சாதிமத வித்யாசம் கிடையாது. மனித ஜாதி முழுவதற்குமே நன்மையை நாடுகின்றது. அது நடந்தேறுமானால் உலகில் ஆண்டவன் ராஜ்யம் அமைந்து விடும்."

மற்றொரு சமயம் பிரார்த்தனை நடந்துகொண்டிருந்தபோது இரண்டு குழந்தைகள் அங்குமிங்கும் அலைந்து பிரார்த்தனைக்கு இடையூறாக இருந்தன. அது காந்தியடிகளுக்கு வேதனையை உண்டாக்கிற்று. அவர் கூறினார் :—

"அந்தக் குழந்தைகள் அப்படி நடப்பதற்கு அவற்றின் பெற்றோர்களேதான் காரணம். கிறிஸ்தவருடைய கோயிலிலும், முஸ்லிம்களுடைய மசூதியிலும் இப்படிக் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்க்க முடியாது. பிரார்த்தனை சமயத்தில் பரிபூரணமான அமைதி உண்டா யிருக்க வேண்டும் என்பதே உண்மையான பண்பாடாகும். கோவிலிலும் தேவாலயத்திலும் மசூதியிலும் இருப்பது போல பயபக்தியான சூழ்நிலை இருக்கவேண்டும். அநேக கோயில்களில் ஆரவாரமாகவே யிருக்கும் என்பதை அறிவேன். அதைக் காண எனக்கு எப்போதும் வருத்தமாகவே இருக்கின்றது. நாம் கோவிலுக்குப் போவது கல்லாலோ உலோகத்தாலோ செய்யப்பட்டுள்ள விக்கிரகத்தை வணங்குவதற்காக அன்று அதில் கோயில் கொண்டிருக்கும். ஆண்டவனை வணங்குவதற்காகவே. நாம் எத்தகைய மதிப்புக் கொடுக்கின்றோமோ அத்தகைய மதிப்புத்தான் அந்த விக்கிரகத்துக்கு உண்டு. அதற்கு வழிபாடு செய்வோர் தரும் புனிதத் தன்மைக்கு அதிகமாக எதுவும் கிடையாது. ஆதலால் குழந்தைகள் உட்பட எல்லோரும் பிரார்த்தனை சமயத்தில் பரிபூரணமாக நிசப்தமாக இருக்கவேண்டியதாகும்."

இங்ஙனம் கூறியதன் காரணமாக மறுநாள் முதல் குழந்தைகள் சரியாக நடந்து கொண்டார்கள்.

பியாரிலால்.

## கேள்வியும் பதிலும்

### சர்க்கரையும் மிட்டாய்களும்

கேள்வி :—பம்பாயில் சர்க்கரை ரேஷனை 25 சதமானம் குறைத்து விட்டார்கள். இதைவிட மிட்டாய் கடைகளின் ரேஷனைக் குறைப்பதன்றோ சரியான காரியம்?

பதில் :—தனி மனிதர்களுடைய ரேஷனைக் குறைப்பதை விட மிட்டாய் வியாபாரிகளின் ரேஷனைக் குறைப்பதுதான் எப்பொழுதும் நல்லது. இந்தக் கஷ்டமான காலத்தில் மிட்டாய் செய்வதையே தடுத்துவிட்டால்கூட நல்லதென்றே சொல்லுவேன். மிட்டாய்கள் ஆரோக்கிய உணவுக்கு அவசியமானவைகள் அல்ல.

### வெள்ளை, பழுப்பு ரொட்டிகள்

கே :—கோதுமை மாவுடன் 10 சதமானம் தவிட்டைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்ற விதி ஜனவரி மாதம் வரை அமலில் இருந்தது. இப்போது அதை நீக்கிவிட்டார்கள். அதை மறுபடியும் ஏற்படுத்தினால் நல்லதல்லவா?

ப :— தவிடு நீக்கிச் செய்யும் வெள்ளை ரொட்டிக்கும் தவிடு நீக்காமல் செய்யும் பழுப்பு ரொட்டிக்கும் நடைபெறும் போட்டி இன்று நேற்று ஏற்பட்டதன்று. நானும் அதைப் பல வருஷங்களாக பார்த்துக்கொண்டு வருகிறேன். ஜனங்கள் வெண்மையைக் கண்டு மயங்கிவிடுகிறார்கள். நீக்ரோவர்கள் அத்தகைய மயக்கம் அடைய மாட்டார்கள் என்று நம்புகிறேன். அது எப்படி யாயினும், ரொட்டியை வெண்மையாக இருக்கும்படி செய்ய விசேஷ முயற்சி செய்யப்படுவது மட்டும் உண்மையாகும். ஆனால் அதிர்ஷ்டவசமாக பட்டினவாசிகள் மட்டுமே அத்தகைய மயக்கம் உடையவர்களாயிருக்கிறார்கள். தவிடு நீக்காமல் செய்யும் சப்பாத்தியே சுவையுடையதென்றும் அந்தச் சப்பாத்தி ஒன்றிலேயே தவிடு நீக்கிச் செய்யும் சப்பாத்தி ஐந்திலுள்ள போஷணை கிடைத்து விடுகிறதென்றும் வைத்தியர்கள் கூறுகிறார்கள். அத்துடன் இப்போது உணவுப் பஞ்சம் உண்டாயிருக்கும் இந்தச் சமயத்தில், தவிடு நீக்காத மாவை உபயோகிப்பதே கடன். எவ்வளவு மாவு மிச்சப்படுத்தப் படுகிறதோ அவ்வளவு மாவும் லாபமாகும். அதுமட்டுமன்று; துறைமுகங்களில் வந்திறங்கும் கோதுமையை எதிர்பார்த்து நிற்பதைவிட கிராமங்களில் சேமித்து வைக்கும் கோதுமையை நம்பி யிருப்பதே நல்லதாகும். ஆதலால் கோதுமை மாவுடன் தவிட்டைச் சேர்த்தே ரொட்டி செய்ய வேண்டும் என்று விதி செய்வது விரும்பத்தக்கதே. யுத்தம் நின்றுவிட்டது. ஆனால் நமக்கோ யுத்தகால நிலைமையை விட இப்போதுள்ள நிலைமையே அதிகக் கஷ்டமானதாக இருப்பதோடு நாளுக்கு நாள் அதிகமாக கேவலமாய் வருவதாகவுமிருக்கிறது. அது எப்போது சீர்திருந்துமோ ஆண்டவனே அறிவான்.

### தேர்தலில் அக்கிரமங்கள்

கே:—சமீபத்தில் பம்பாயில் நடந்த தேர்தல்கள் ஒன்றில் அக்கிரமங்கள் நடந்து அதிகமாகச் சேதம் உண்டாய் விட்டதைக் கேட்டிருப்பீர்கள். இத்தகைய சந்தர்ப்பத்தில் அஹிம்சா தர்ம போதகர் வாயை மூடிக் கொண்டு இருப்பது அழகா?

ப :—நான் மௌனமாயிருப்பது அழகா அன்றா என்ற கேள்வியைப் பற்றி எழுத விரும்பவில்லை. இப்படியேதான் வருங்காலத்திலும் அக்கிரமங்கள் நடைபெறும் என்று தோன்றினால் மட்டுமே இவைகளைக் கவனிக்க வேண்டியது அவசியமாகும். இல்லை எனில் அவைகளைக் கவனிப்பது தவறே. இடையிடையே நிகழும் அத்தகைய அக்கிரமங்களைக் கண்டு நாம் மனத்தைப் புண்படுத்திக் கொள்ளலாகாது. ஜனங்கள் படிப்படியாகத்தான் அஹிம்சையைக் கற்றுக்கொள்வார்கள். இத்தகைய சம்பவங்களிலிருந்துகூட அவர்கள் அஹிம்சா படிப்பினையைக் கற்றுக்கொள்ளக்கூடும். அதுபோலவே இந்த அக்கிரமங்கள் தொத்து நோய்போல் ஆனாலும் ஆகிவிடலாம். அநேக ஜனங்கள் தாங்கள் செய்வது தான் சரி, பிறர் செய்வதெல்லாம் தவறே என்று எண்ணுகிறார்கள். அவர்கள் தங்கள் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ளும்படி பிறரை நிர்ப்பந்திப்பது தவறு என்று கருதுவதேயில்லை. இந்தத் தவறு நீக்கப்படவேண்டும். நாம் செய்வதோ கூறுவதோ சரியாக இருக்குமானால், அதைப் பிறர் ஏற்றுக்கொள்வதற்கு எல்லையற்ற பொறுமையுடன் காத்திருக்க வேண்டும்.

இப்பொழுது நாம் நம்முடைய பிழைகளை உணரவில்லை என்றே தோன்றுகிறது. பகுத்தறிவு இல்லாதவர்களும் சுகபோகத்துக்காகவே ஜீவிக்கிறவர்களும் தங்கள் பிழைகளை ஒரு நாளும் அறிந்துகொள்ள முடியாது. அத்தகையோர் பலராக இருந்தால், நம்முடைய அஹிம்சையானது பலவீனருடைய ஆயுதமாகவும் அஹிம்சைபோல நடிக்கும் ஹிம்சையாகவுமே இருந்து வருவதாகத் தீர்மானித்துக் கொள்ளலாம். இந்த நிலைமை நீடிக்குமானால் பிரிட்டிஷ் ஆட்சி நீங்கியவுடனே ரத்தக்களறி ஏற்படாமல் போகாது. வேறு அன்னிய தேசத்தார்க்கு அடிமையாகக் கூட ஆகிவிடலாம். அல்லது உள் நாட்டிலேயே ஆயுத மில்லாதவர்கள் ஆயுத முடையவர்க்கு அடிபணிய வேண்டியிருக்கலாம். அத்தகைய சண்டை சச்சரவுகளைப் பார்க்கக்கூடிய துர் அதிர்ஷ்டம் உண்டாகுமானால் அஹிம்சையில் நம்பிக்கையுடையவர்கள் எல்லோரும் அதைத் தடுப்பதற்காகத் தம்முடைய உயிரைச் சந்தோஷமாகத் தியாகம் செய்து அதன் மூலமாக அமரவாழ்வு அடைவார்கள்.

பொது ஜனங்கள் அஹிம்சையைப் போதுமான அளவு கிரகித்துக் கொண்டுவிட்டார்கள் என்றும், பிரிட்டிஷ் ஆட்சி நீங்கியதும் இங்குமங்கும் சிறு சிறு சச்சரவுகள் நேர்ந்த போதிலும் சகோதரர்கள் போல் சமாதானமாகி உலக முழுவதற்கும் சாந்தியைப் போதிப்பார்கள் என்றும் நம்புகின்றேன்.

பம்பாயில் போரிட்டவர்களே அதனால் என்ன நன்மை உண்டாயிற்று என்பதை அறிவார்கள். எனக்கோ யார் போரிட்டார்கள், எதற்காகப் போரிட்டார்கள், ஏதேனும் பயன் பெற்றார்களா என்ற விஷயங்கள் எதுவும் தெரியாது.

புது டில்லி. மோ. க. காந்தி.

தமிழ் ஹரிஜன் உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் நீங்கள் சந்தாதாரராகச் சேர்ந்துவிடுவதே அதற்குச் சுலபமான வழி.

வருஷ சந்தா தபால் செலவு உள்பட ரூ. 7 0 0
ஆறுமாத சந்தா „ „ ரூ. 3 8 0

**தமிழ் ஹரிஜன்,**

தியாகராயநகர் :: சென்னை.

# தமிழ் ஹரிஜன்

...... தமிழ்ப்பண்ணை, வெளியீடு: ஆசிரியர், நாமக்கல் கவிஞர். ......

மே 12 ஞாயிறு 1946

## சில கேள்விகள்

அஹிம்சையை அனுஷ்டிப்பது பற்றி லண்டன் நண்பர் ஒருவர் ஏழு கேள்விகள் கேட்டிருக்கிறார். அவைகளைப் போன்ற கேள்விகளுக்கு இதற்குமுன் "யங் இந்தியா"விலும் "ஹரிஜனி"லும் ஏற்கனவே பதில் எழுதியிருந்த போதிலும் அவைகளை எல்லாம் ஒரே கட்டுரையில் எழுதினால் உபயோகமாயிருக்கும் என்று எண்ணி மறுபடியும் எழுதுகின்றேன்.

1. கேள்வி:—ஹிம்சையை ஆதாரமாக வைத்தே சிருஷ்டிக்கப்பட்டுள்ள தற்கால அரசாங்கங்கள் உள்நாட்டுக் கலகங்களையும் வெளிநாட்டுப் படையெடுப்பையும் அடக்குவதற்கு அஹிம்சா எதிர்ப்பு முறையைக் கையாள முடியுமா? அல்லது அஹிம்சா எதிர்ப்பு முறையைக் கையாள விரும்புகிறவர்கள் முதலாவதாக அரசாங்க அதிகாரத்தைத் துறந்துவிட்டு தங்கள் எதிரியின் ஸ்தானத்திலேயே தங்களையும் வைத்துக் கொள்ளத்தான் வேண்டுமா?

பதில்:—ஹிம்சையை ஆதாரமாகக் கொண்ட அரசாங்கம் உள்நாட்டுக் குழப்பத்தையும் வெளிநாட்டுக் குழப்பத்தையும் அடக்குவதற்கு அஹிம்சா முறையை அனுஷ்டிப்பது சாத்தியமில்லை. யாரும் ஏககாலத்தில் கடவுளுக்கும் சாத்தானுக்கும்தொண்டு புரியவும் முடியாது; ஏககாலத்தில் சாந்தமாகவும் கோபமாகவும் இருக்கவும் முடியாது. ஆனால் அரசாங்கம் அஹிம்சையை ஆதாரமாகக் கொண்டு இருக்க முடியுமென்பது என்னுடைய வாதம். அதாவது அரசாங்கமானது ஆயுதபாணிகளாக உலகம் முழுவதும் எதிர்த்தாலும் அஹிம்சா எதிர்ப்பு முறையை அனுஷ்டிக்க முடியும். அசோகருடைய அரசாங்கம் அத்தகையதாகவே இருந்தது. அதேமாதிரி இப்போதும் செய்ய முடியும். அசோகருடைய அரசாங்கத்தின் அஸ்திவாரம் அஹிம்சையன்று என்று நிரூபித்தாலுங்கூட என்னுடைய வாதம் தவறாய் விடாது. அதன் தகுதியைக் கொண்டே அதை மதிப்பிட வேண்டும்.

2. கேள்வி:—உள்நாட்டுக் கலகத்தையும் வெளிநாட்டுப் படையெடுப்பையும் முற்றிலும் அஹிம்சா முறையிலேயே காங்கிரஸ் சர்க்காரால் அடக்கிவிட முடியும் என்று எண்ணுகிறீர்களா?

பதில்:—அது முற்றிலும் சாத்தியமே. ஆனால் காங்கிரஸ் என்னுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக் கொள்ளாமலிருக்கலாம். காங்கிரஸ் தன்னுடைய கொள்கையை மாற்றிக்கொண்டால் அது இதுவரை கையாண்ட அஹிம்சை பலவீனர்களுடையதே என்றும் அரசாங்கமும் அஹிம்சையைக் கையாள முடியும் என்னும் நம்பிக்கை அதற்கு இல்லை என்றுமே அர்த்தமாகும்.

3. கேள்வி:—அஹிம்சையையே கையாள்வான் என்று தெரிந்ததும் போக்கிரி உற்சாக மடைந்து விடுவான் அல்லவா?

பதில்:— போக்கிரிக்கு பலவீனர்களுடைய அஹிம்சையைக் கண்டால்தான் கொண்டாட்டம். பலவான்களுடைய அஹிம்சையே சர்வாயுதபாணியாயுள்ள தலைசிறந்த வீரனையோ அவனைப் போன்ற அநேக வீரர்கள் சேர்ந்த படையையோவிட எந்தக் காலத்திலும் அதிகமான பலமுடையதாகும்.

4. கேள்வி:—இந்திய மகாஜனங்களில் ஒரு பகுதியார் பிறர்க்குப் பிடிக்காததோடு உண்மையிலேயே நியாயத்துக்கு விரோதமானதாகவும் இருக்கும் ஒரு சுயநலக் கொள்கையை ஆயுதபலத்தைக் கொண்டு திணிக்க வந்தால் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று கூறுகிறீர்கள்? அத்தகைய சந்தர்ப்பத்தில் அஹிம்சை முறையை அரசாங்க சம்பந்த மில்லாத ஸ்தாபனம் தானே கையாள முடியும்? அரசாங்கத்தாலும் அது சாத்தியமாகுமா?

பதில்:—இந்தக் கேள்வி எந்தக் காலத்திலும் ஏற்பட முடியாத சந்தர்ப்பத்தைக் கூறுகிறது. அஹிம்சையை ஆதாரமாகக் கொண்ட அரசாங்கமாயிருந்தால் அது எதையும் சிந்தித்துப் பார்த்து அதன்படியே நடக்கக்கூடிய அறிவுள்ள ஜனங்களுடைய சம்மதத்தைப் பெற்று நடப்பதாகவே இருக்கும். அத்தகைய ராஜ்யத்தில் சுயநலப் பகுதி இருந்தாலும் கவனிக்கக்கூடிய அளவு பெரியதாக இராது. அந்தப் பகுதி அதிகப்படியான பெரும்பாலோருடைய தீர்மானமான அபிப்பிராயத்துக்கு விரோதமாக ஒரு நாளும் நிற்க முடியாது. சர்க்கார் என்பது ஜனங்களுக்குப் புறம்பானதன்று. பெரும்பாலோருடைய அபிப்பிராயப்படி நடக்கும் ஒரு ஸ்தாபனமேயாகும். அந்த அபிப்பிராயம் அஹிம்சா முறையில் வெளியிடப்படுமானால் அப்போது பெரும்பாலோர் 100ல் 51 பேராக இராமல் 99 பேராகவே இருப்பார்கள். அதாவது ஏறக்குறைய எல்லோரும் சேர்ந்த பெரும்பான்மையாகவே இருக்கும்.

5. கேள்வி:—இராணுவ முறையில் பலமுள்ளவர்களுடைய அஹிம்சா எதிர்ப்புத்தானே இராணுவ முறையில் பலமில்லாதவர்களுடைய அஹிம்சா எதிர்ப்பைவிட அதிகமாக வெற்றி யளிக்கக் கூடியதாக இருக்கும்?

பதில்:—இப்படிக் கூறுவது முற்றிலும் முரண்பாடான விஷயமாகும். இராணுவ முறையில் பலமுள்ளவர்களால் ஒரு நாளும் அஹிம்சா எதிர்ப்பைச் செய்ய முடியாது. உதாரணமாக ருஷ்யா அஹிம்சா எதிர்ப்பு முறையை அனுஷ்டிக்க வேண்டுமானால் ஹிம்சை செய்வதற்காகத் தன்னிடமுள்ள சக்தி அனைத்தையும் துறந்து விடவேண்டியது அவசியமாகும். உண்மை யாதெனில் ஆயுத பலத்தில் சிறந்தவர்களாயிருந்தும் அஹிம்சையை அனுஷ்டிக்க முடிவு செய்வார்களானால், அப்படிப்பட்டவர்களேதான் உலகத்துக்கு மட்டுமின்றி விரோதிகளுக்குங்கூட அஹிம்சையின் மேன்மையை அதிகமாக விளக்கிக் காட்ட முடியும். அஹிம்சை முறையில் பலம் பொருந்தியவர்கள், இராணுவ முறையில் பலமுள்ளவர்களோ பலமில்லாதவர்களோ யாரையும் லட்சியம் செய்யமாட்டார்கள்.

6. கேள்வி:—அஹிம்சா முறையை அனுஷ்டிக்கும் சேனைக்கு வேண்டிய பயிற்சியும் கட்டுப்பாடும் யாவை? சாதாரணமாக இராணுவத்தார் கையாளும் பயிற்சி முறைகளில் சிலவற்றை யேனும் ஏற்றுக் கொள்ளவேண்டாமா?

பதில்:—இராணுவத்தார் ஆரம்பத்தில் பயிலும் சில விஷயங்களை அஹிம்சைச் சேனையும் பயிலவேண்டியதே. அத்தகைய விஷயங்கள் கட்டுப்பாடு, கவாத்து, ஒன்று சேர்ந்து பாடுதல், கொடியேற்றுதல், கொடியைக் கொண்டு விஷயம் அறிவித்தல் முதலியனவாகும். இதுவுங்கூட இன்றியமையாத அவசியமன்று. ஏனெனில் இரண்டின் அஸ்திவாரமும் வேறு வேறாகும். அஹிம்சைச் சேனைக்கு அத்தியா

வசியமாக வேண்டிய பயிற்சி யாதெனில் கடவுளிடம் அசையாத பக்தியும் சேனைத் தலைவனிடம் பரிபூரணமாக நம்பிக்கையும் வீரர்களுக்குள் பரிபூரணமான ஒத்துழைப்பும் இருக்கவேண்டியதே யாகும்.

கேள்வி:—இந்தியா இங்கிலாந்து போன்ற தேசங்கள் இராணுவ நடவடிக்கை எடுக்குமுன் அஹிம்சையைக் கையாண்டு பார்க்கத் தீர்மானித்த போதிலும், இப்பொழுதுள்ள நிலைமையில் இராணுவத்தை முற்றிலும் சரியான நிலைமையில் வைத்திருக்க வேண்டியது அவசிய மல்லவா?

பதில்:—இந்தியாவும் இங்கிலாந்தும் இராணுவத்தை வைத்துக்கொண் டிருக்கும்வரை அஹிம்சையை எந்தச் சந்தர்ப்பத்திலும்சரியானபடி கையாண்டு பார்க்கப் போவதில்லை என்பது மேற்கூறிய பதில்களிலிருந்தே தெளிவாகும். ஆயினும் இராணுவபலம் வாய்ந்த தேசங்கள் எல்லாம் தங்களுக்குள் எழும் வழக்குகளைச் சமாதான முறையிலேயே தீர்த்துக் கொள்வதற்காக முயன்று வருகின்றன என்பது உண்மையே. ஆனால் நாம் இப்போது ஆராய்வது யுத்தத்தில் இறங்குமுன் நடைபெறும் ராஜீப்பேச்சுக்கள் அல்ல. ஜனங்களைக் கூட்டங் கூட்டமாகக் கொல்லும் "கொலை" யாகிய ஆயுதங் கொண்டு செய்யும் யுத்தத்துக்கு மாற்று வழியைக் கண்டு பிடிப்பதே யாகும்.

ஸிம்லா, மோ. க. காந்தி.
2—5—46.

## வாரக் கடிதம்

### இருதலைக் கொள்ளி

காந்தியடிகளுடன் இருப்பது எந்த நிமிஷத்திலும் நெருப்பைக் கக்கக்கூடிய எரிமலையின் சிகரத்தில் உட்கார்ந்திருப்பது போன்றதாகும் என்று காலஞ்சென்ற மகாதேவ் தேசாய் அடிக்கடி சொல்வது வழக்கம். காந்தியடிகள் ஸிம்லாவுக்குப் போகத் தீர்மானித்த சமயத்தில் அவர் அங்கு போய்ச் சேர்ந்ததும் தம்முடைய பரிவாரம் முழுவதையும் டில்லிக்குத் திருப்பி அனுப்பி விடுவார் என்று நாங்கள் யாரும் கனவுகூடக் காணவில்லை. அவர் தம்மைச் சூழ்ந்துள்ள நிலைமையால் எல்லோரையும்விட அதிகமாகப் பாதிக்கப்படும் சுபாவமுடையவர். எவ்விதமான தோல்விகள் ஏற்பட்டாலும் எல்லாம் இறைவன் செயல் என்று மனக்கலக்கம் சிறிதும் கொள்ளாதவராயிருந்த போதிலும், அவருடைய சூழ்நிலையில் அணுவளவு பொய்யிருந்தாலும் அல்லது பொய் யிருப்பதாகச் சந்தேகம் தோன்றினாலும் உடனே மனவேதனை அடைந்து விடுகின்றார். அவர் நமக்கும் மந்திரி தூதுகோஷ்டியார்க்கும் யோசனை கூறக்கூடிய வாள் முனையில் நடப்பது போன்ற காரியத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார். ஆனால் அங்குள்ள சூழ்நிலையில் ஏதோ ஒன்று விபரீதமாக இருந்ததாக எண்ணினார். அது இன்ன தன்மையுடையதென்று அவரால் கூற முடியாதிருந்த போதிலும் அவருடைய மனத்தை நிம்மதி யடையாதபடி செய்துவிட்டது. அத்தகைய சந்தர்ப்பங்களில் அவருக்கு எது வழக்கமோ அதுபோல், "அண்டத்திலுள்ளதே பிண்டத்திலும்," என்னும் தத்துவத்தில் நம்பிக்கை யுடையவராதலால், இப்பொழுது தம்மைத்தாமே சோதிக்க ஆரம்பித்துவிட்டார். தாம் சரியாக நடந்துகொண்டால் பிறரும் சரியாக நடந்து கொள்வர் என்று எண்ணினார்.

### சோதனை

ஹரிஜன் வாரப்பத்திரிகைகள் மூன்றாக இருந்தன, இப்போது நான்கு ஆய்விட்டன. அவைகளுக்கு ஆசிரியராயிருக்கும் வேலையாலும் கடிதப் போக்கு வரத்து நாளுக்கு நாள் அதிகமாகப் பெருகி வருவதாலும் அவருக்கு அநேக சகாக்கள் வேண்டியது அவசியமாய் விட்டது. எத்தனைபேரை ஸிம்லாவுக்கு அழைத்துப் போனால் போதும் என்று செவ்வாய்க்கிழமை யன்று என்னைக் கேட்டார். அதைச்சொன்னேன், ஆனால் அது அவருக்குப் பூரணமான திருப்தியை அளிக்கவில்லை.

இதற்கு முந்தின தடவைகளில் நாங்கள் ஸிம்லாவில் ராஜ்குமாரி அமிர்த கௌர் அவர்களுடைய விருந்தாளிகளாகவே இருந்தோம், அவருடைய மாளிகையில் அதிகமான பேர் தங்கயிடமில்லாதிருந்ததும் அவருடைய வேலைக்காரர்கள் பலர் நோயாகவோ ரஜாவில் போயோ இருந்ததும் அவருக்கு அதிக வேதனையைத் தந்தன, அத்துடன் காந்தியடிகள் "மகாத்மா" வாக இருந்தபடியால், அவரை ஜனக்கூட்டங்கள் செய்யும் அன்பிலிருந்து காப்பாற்ற வேண்டிய கஷ்டமும் சேர்ந்துகொண்டது. இருதலைக் கொள்ளி நிலைமை ஏற்பட்டு விட்டது. அரசாங்கம் முன்யோசனையுடன் அவருக்கு ஒரு பெரிய பங்களாவையும் போக்குவரத்து வசதிகளையும் செய்திருந்தது. அவைகள் அனைத்தையும் கொஞ்சமும் குறைத்துக்கொள்ளாமல் ஏற்றுக் கொள்வதா என்று யோசித்தார். தம்முடைய கடவுள் நம்பிக்கையும் பற்றற்ற தன்மையும் சோதிக்கப் படுவதாக எண்ணினார். இதற்கு அதிகமாகப் பரிவாரத்தைக் குறைப்பதும் சாத்தியமாகத் தோன்றவில்லை. அப்படியானால் அவரால் பிறர் உதவியில்லாமலே சமாளித்துக் கொள்ள முடியுமா? அவர் கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றும் கருவியாகவே இருந்தால், இந்தப் புறஉதவிகள் எல்லாம் அவசியமா?

"நாம் எவ்வளவோ பெரிய அக்கிரமச் சக்திகளை எதிர்க்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். நாலா பக்கங்களிலும் லஞ்சமும் பொய்யும் சூதும் நடமாடிக் கொண்டிருக்கின்றன. பற்றற்ற தன்மை என்னும் கோடரியைக் கொண்டு நாம் இந்தக் காட்டினூடே சென்று தப்பி வெளிவருவதெப்படி?" என்று யோசித்தார்.

அதன்பின் தம்முடைய கஷ்டத்தை எங்களிடம் கீழ்க்கண்டவாறு கூறினார்:—"இந்தச் சோதனையான நேரத்தில் நான் இறைவன் கையிலேயே என்னை ஒப்புவித்துவிட்டு ஸிம்லாவுக்கு தன்னந் தனியாகப்போக எண்ணுகின்றேன். ஆனால் நீங்களும் அதற்குச் சம்மதித்தால்தான் அப்படிச் செய்வேன். என் விருப்பப்படி நடக்கும்படி நிர்ப்பந்தம் செய்வேனானால் அது பற்றற்ற தன்மைக்கு முழுதும் விரோதமாகும்."

இதைக் கேட்டதும் நாங்கள் திடுக்கிட்டுவிட்டோம். யாரும் போகாமல் அவரைத் தனியாக அனுப்பும் அந்தப் பிரமாண்டமானபொறுப்பை ஏற்க நாங்கள் தயாராக இல்லை. நாங்கள் அவசரம் அவசரமாக யோசனை செய்து, எங்கள் முடிவை அவரிடம் சமர்ப்பித்தோம்.

அவருடைய பரிவாரத்தார்கள் "தனியாகப் போகச் சம்மதிக்க முடியாது. அதைச் சிந்தித்துப் பார்க்கக்கூட முடியாது. மூன்றுபேரைக் கூட்டிப் போகட்டும், அதுவும் முடியாதென்றால் பியாரிலாலையாவது கூட்டிப் போகட்டும், அப்பொழுதுதான் திருப்தியடைவோம்" என்று சொன்னார்கள்.

ஆனால் காந்தியடிகளோ அசையவில்லை. "எல்லோரும் வரட்டும் அல்லது ஒருவரும் வேண்டாம். நம்பிக்கையைப் பங்குபோட முடியாது. என்னை நீங்கள் ஆண்டவனிடம் அரை குறையாக ஒப்புவிக்க முடியாது. ஒன்றில் நம்பிக்கை யில்லை என்றால் ஒன்றிலுமே நம்பிக்கை கிடையாது என்று கவிஞர் கூறுவது ஞாபகமில்லையா?" என்று மட்டுமே பதிலளித்தார்.

**கடவுளை நம்புக**

ஆனால் அதிகமாக யோசிப்பதற்குச் சாவகாசமில்லாதிருந்தபடியால், பரிவாரம் முழுவதும் ஸிம்லாவுக்குப் புறப்பட்டுப் போயிற்று.

ஆயினும் காந்தியடிகளின் ஆத்ம சோதனை நடந்துகொண்டே யிருந்ததோடு, ஸிம்லா போய்ச் சேர்ந்த அன்று மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் வெளியிடப்படவும் செய்தது.

அன்று அவர் ஈஷோபனிஷதத்தின் முதல் ஸ்லோகத்தை எடுத்துக்கொண்டு பேச ஆரம்பித்தார். அந்த ஸ்லோகம் வருமாறு :—

"அனைத்தையும் அவனிடம் கொடுத்துவிட்டு அவனுடைய சேவைக்கு எவ்வளவு அத்தியாவசியமோ அவ்வளவு மட்டுமே அவனுடையதிலிருந்து உபயோகித்துக்கொள். அணுவளவுகூட அதிகமாக உபயோகியாதே."

காந்தியடிகள் கூறினார் :—

"நான் என்னுடைய பரிவாரத்தை என்னுடன் வைத்துக்கொண்டிருக்கும் வரை, இந்த உபநிஷதத்தின் உபதேசத்தின்படி நடப்பவன் ஆவேனா? நாம் முதன் முதலாக எல்லாவற்றையும் அவனிடம் ஒப்படைத்து விடவேண்டும், அதன் பிறகு அவனுடைய அருளால் எது கிடைக்குமோ அதைக்கொண்டே அவனுக்குச் சேவையைச் செய்ய வேண்டும். எல்லாவற்றையும் கொடுத்து விடுவதே முதன் முதலாகச் செய்ய வேண்டிய காரியம்."

அதன் பிறகு அவர் மறுபடியும் எங்களிடம் அதே விஷயத்தைப் பேசினார் :—

"கடவுள் கட்டாமல் மனிதன் கட்டுவதெல்லாம் வீண் காரியமே. ஏன் என்னைக் கடவுளிடம் ஒப்புவித்துவிட இணங்காம லிருக்கிறீர்கள்? கடவுளை நம்புவதற்கு இன்னும் காலங்கடந்து விடவில்லை. நீங்களே யோசித்துப் பாருங்கள். பிறரிடம் யோசனை கேட்கவேண்டாம். உங்கள் முடிவை வந்து கூறுங்கள்."

அன்று மாலையில் அவர் தம்முடைய மனவேதனையை அகாதா ஹாரிஸன் அம்மையாரிடம் கூறினார் :—

"இந்த வேஷதாரியைப் பாருங்கள் என்று உலகம் சிரிக்கத்தான் செய்யும். ஆனால் நான் அதைப் பொருட்படுத்தவில்லை. பிறர் உதவியை நம்பி வாழ்ந்துவருபவன் திடீரென்று அதைவேண்டாம் என்று விட்டுவிட முடியாது. நான் பழயனவற்றில் பற்றுள்ளவன். நான் வெகுநாளாக வைத்துக்கொண்டிருந்த ஒரு சிறிய பென்ஸில் துண்டை இன்று காலை முதல் தேடிக்கொண்டிருந்தேன். அதை இழக்க என் மனம் ஒப்பவில்லை. அந்தச் சிறு காரியத்திலேயே அப்படியானால், நான் பல வருஷங்களாக எனக்கு உதவி செய்வதற்காக பயிற்சி அளித்து தேர்ச்சிபெறச் செய்துள்ள என்னுடைய பரிவாரத்தை வேண்டாம் என்று எப்படிச் சொல்ல முடியும்? அது எளிதான காரியமா?

ஆனால் அது எளிதாகத் தான் இருக்க வேண்டும். கடவுளிடம் தன்னை ஒப்புவித்து விட்டவனுக்குக் கவலை இருக்க நியாயமில்லை. இந்த மாதிரியான பற்றுக்கு இடங்கொடுப்பதாயிருந்தால் என்னுடைய ராமநாமம் வெறும் உச்சாரணமாகவே ஆகும். நான் காங்கிரஸுக்கும் மந்திரி தூதுகோஷ்டிக்கும் பிறர்க்கும் உபயோகமற்ற வழிகாட்டியாகவே ஆவேன். அவர்கள் என்னுடைய யோசனைப்படி நடப்பதானால் அது இருட்டில் புகுவதாகவே இருக்கும். அத்தகைய அபாயத்தை அந்த அனுபவம் வாய்ந்த ராஜதந்திரிகள் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆதலால் நான் யோசனை கூறுவதற்குத் தகுந்தவனாக ஆகவேண்டியுது அவசியம்.

குடும்பத்தார் சூழ்ந்திருந்தால் எவ்வளவு சிறிய அளவிலேனும் அவர்களையும் கவனிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுகிறது. இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் நான் என்னைப் பரிபூரணமாகக் கடவுளுக்கே அர்ப்பணம் செய்துவிட விரும்புகின்றேன்."

அகாதா ஹாரிஸன் :—"இந்த நெருக்கடியான சமயத்தை இதுவரை ஏற்படாத அளவு நெருக்கடியுள்ளதாகக் கருதுகின்றீர்களா?"

காந்தியடிகள் :—"ஆம், நெருக்கடியோடு நெருக்கடி நேர்ந்திருக்கிறது. நெருக்கடி புறத்தில் மட்டுமின்றி என்னுடைய அகத்திலும் உண்டாயிருக்கின்றது. இந்தச் சோதனையில் நான் வெற்றி பெறுவேனா பெறமாட்டேனா இனிமேல்தான் தெரியும். இதுவரை என்னுட னிருந்தவர்களே எனக்கு வேண்டிய சிறு சிறு காரியங்களைக் கூடக் கவனித்து வந்தார்கள். ஏதேனும் கெட்டுப்போனால் அவர்களே பொறுப்பாளிகளா யிருந்தார்கள். ஆனால் நாளைமுதல் நானே அதை எல்லாம் செய்யவேண்டும். ஏதேனும் கெட்டுப்போனால் என்னையேதான் குறை கூறிக்கொள்ள வேண்டும். ஆனால் அப்படி நானே அனைத்தையும் செய்து கொள்வதால் என்னுடைய மனம் சாந்தி அடையும். இப்படிப் பற்றற்று வாழவும் அதனால் உண்டாகும் அகமகிழ்ச்சியை அடையவும் முடியுமானால் அது எத்துணைப் பெரிய காரியமாகும்.

இதுதான் என்னுடைய வாழ்க்கையில் பெரிய சோதனையும் என்னுடைய ஆன்மவளர்ச்சிக்கு அவசியமான படியுமாகும்"

இந்த ஆன்மவெள்ளத்துக்கு முன் யாரால் நிற்க முடியும்?

"புதியதோர் கிரகம் கண்ணுக்குத் தெரிந்தால் வானசாஸ்திரிக்கு எப்படி யிருக்குமோ—அமரிக்காவைத் தேடிச் சென்ற போது நிலம் கண்ணுக்குத் தெரிந்ததும் கார்டிஸ் என்னும் கப்பல் மாலுமிக்கு எப்படி யிருந்ததோ" அதேமாதிரி யிருந்தது என்னுடைய மனம்.

**பணிந்துவிட்டோம்**

ஞானிகள் எல்லோரும் இந்த நாட்டில் மட்டுமன்று, உலகமுழுவதிலும் இப்படித்தான். அநேக நூற்றுண்டுகளுக்கு முன் வாழ்ந்த தாமஸ் அக்கம்பிஸ் என்னும் கிறிஸ்தவ முனிவருடைய மொழிகளில் காந்தியடிகள் கூறியது தொனிக்கின்றது அல்லவா?

அக்கம்பிஸ் மொழிகள் :—

"இறைவனே! என்னை யாரும் தடை செய்ய முடியாத அந்த இடத்துக்கு நான் வரவேண்டுமானால் உம்முடைய அருள் எனக்கு இன்னும் அதிகமாகத் தேவையாகும். என்னை எதுவும் தடுக்கும் வரை நான் உம்மிடம் பறந்துவர முடியாது.

*

"இகலோக இடையூறுகள் உள்ளவரை தெய்வீக விஷயங்களைக் கவனிக்க முடியாது."

*

"ஆத்ம எழுச்சி ஏற்படாமலும், சகல பிராணிகளிலிருந்தும் விடுதலை பெருமலும், ஆண்டவனுடன் ஐக்கிய மாகாமலுமிருந்தால், என்ன இருந்தாலும் என்ன அறிந்தாலும் எட்டுணையும் பிரயோசனப்படாது."

*

"கடவுளாக இல்லாத எதுவும் சூனியமே. சூனியமாகக் கருதப்பட வேண்டியதே."

அவரை உயரப் பறக்கவிடாமல் தடுப்பதற்கு அற்ப ஜந்துக்களாகிய நமக்கு என்ன உரிமை உண்டு? நம்முடைய உதவி இல்லாவிட்டால் அவருக்குக் கஷ்டம் உண்டாய்விடும் என்று எண்ணு

வோமானால் அது நம்முடைய ஆணவத்தையே காட்டும். ஆதலால் நான் அடிபணிந்து விட்டேன். "தங்கள் விருப்பம் போலவே செய்யுங்கள். நாங்கள் உடனேயே டில்லிக்குப் புறப்பட்டு விடுகிறோம்" என்று அவரிடம் சொன்னேன்.

என்னுடைய முடிவை சர்தாரிடம் சொன்னேன். அவர் என்ன சொல்வாரோ என்று எண்ணிக் கொண்டிருந்தேன். எனக்குப் பயமாகவே இருந்தது. ஆனால் அவர் "நீர் சொல்வது சரிதான். அவர் பறக்கும் உயரத்தில் நாம் பறக்க முடியாது. அவருடைய வாதத்தை அறிந்து கொள்ளக்கூட முடியாது. அவருக்கு இடையூறாக நிற்க நமக்கு உரிமை கிடையாது" என்று மட்டுமே கூறினார்.

ஸிம்லா, பியாரிலால்
சனி, 4—5—46.

## கதர் இயக்கம்

## ஆட்டங் கண்டு விட்டதா?

கதர் இயக்கத்தில் நம்பிக்கை யில்லாதவர்களுக்கே அது ஆட்டங் கண்டு விட்டதாகத் தோன்றுகிறது.

உண்மையில் கதர் இயக்கம் ஏழைகளின் வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒரு சாதனமா யிருப்பதுடன் அஹிம்சையை வளர்த்து அதன் மூலம் சுதந்திரத்தை அடையவும் பாடுபடுகிறது. கதர்த் தொழிலில் உள்ள கஷ்டங்களைத் தமிழ் நாட்டிலிருந்து வந்திருக்கும் கடிதம் ஒன்று நன்கு விளக்கி யிருப்பதைக் கீழே காணலாம்.

"அகில இந்திய சர்க்கா சங்கத்திற்கு இப்போது இரண்டு கஷ்டங்கள் இருக்கின்றன. ஒன்று, தற்போதுள்ள நிலைமையிலேயே கதர் உற்பத்தியை நடத்துவது. இரண்டாவது நம்முடைய நெசவுத் தொழிலாளரின் தொழிலுக்கும் அவர்களுடைய கிராமங்களுக்கும் புதுமாதிரி அமைப்பு அளிப்பது.

கடந்த சில மாதங்களாக அத்தாட்சி பெறாத வியாபாரிகள், நம்முடைய நெசவாளர்களிட மிருந்து நூலை வாங்கி வியாபாரம் செய்கிறார்கள். நம்முடைய நெசவாளர்கள் நாம் கொடுக்கும் நல்ல பஞ்சுகளிலிருந்து நூல் உற்பத்தி செய்கிறார்கள். நம்முடைய நெசவாளர்கள் நெய்யும் கதர்த் துணிகளை அவர்கள் வாங்கிக் கொண்டு போய் லாபத்திற்கு விற்பனை செய்கின்றனர். அவர்கள் நம்முடைய நெசவாளர்களின் வீட்டுக்குப் போய், நமக்காக நெய்து வைக்கப்பட்டிருக்கும் கதர்த் துணிகளை அதிக விலை கொடுத்து வாங்குவதுடன் சரிக்குச் சரி நூலையும் கொடுக்கிறார்கள். இதனால் நெசவாளர்களுக்கு அதிக லாபமும் நூலும் கிடைப்பதால், நம்முடைய வேலையைக் கவனிப்பதில்லை. இப்படியாக விலைக்கு வாங்கப்படும் கதர்த் துணிகளே அதிக விலைக்கு விற்கப்படுகின்றன.

இந்தப் பகுதியில் அத்தாட்சி பெறாத வியாபாரிகள் சுமார் 50 பேர்களுக்கு மேல் இருக்கின்றனர். அவர்கள் மாதத்தில் 7 லட்சம் ரூபாய் பெறுமான அத்தாட்சி பெறாத கதரை உற்பத்தி செய்வதாகச் சொல்லப்படுகிறது. இவர்களில் சில காங்கிரஸ்காரர்களும் இருக்கிறார்கள்.

நெசவுத் தொழிலாளர்களின் 'டெப்பாஸிட்' தொகை நம்மிட மிருந்தபோதிலும் இவ்வாறு நெசவுத் தொழிலாளிகள் அத்தாட்சி பெறாத வியாபாரிகளால் உபயோகித்துக் கொள்ளப்படுவதை தடுக்க முடியவில்லை.

குறைந்த வேலைக்கு அதிகப் பணம் கொடுக்கப்படுவதுடன் நெசவின் தராதரத்திற்குத் தகுந்தபடி கூலி கொடுப்பது போன்ற எந்தவிதமான நிர்ப்பந்தமும் அவர்கள் வைப்பதில்லை. ஆகையால் நெசவாளர்கள் அத்தாட்சி பெறாத வியாபாரிகளுக்கே துணிகளை விற்பதற்குத் தூண்டப்படுகிறார்கள்.

இதைத் தவிர இரண்டாந்தர நூல்களையும் மேற்படி வியாபாரிகள் நெசவாளர்களுக்குத் தருகிறார்கள். இந் நூலுக்குக் 'கூப்பன் கார்டு' ஏதும் கிடையாது. இவை மில்களில் வீணாக்கப்படும் நூல்கள். முதல்தரப் பஞ்சின் விலைக்கு முக்கால் விலையாக இவை விற்கப்படுகின்றன. அத்துடன், இவை நெய்வதற்குச் சுலபமாக இருப்பதால் நெசவாளர்கள் இந்த நூலையே விரும்புகிறார்கள்.

வேலைக்கு அதிகப்படியான கூலி, 'டிப்பாஸிட்' இல்லாதது, நூல் தராதரம் பார்க்காதது முதலிய காரணங்களை உத்தேசித்து நெசவாளர்கள் அத்தாட்சி பெறாத வியாபாரிகளுக்காக வேலை செய்யும் பழக்கம் ஏற்பட்டு வருகிறது.

இத்தியாதி காரணங்களினால் நம்முடைய சர்க்கா சங்கத்தின் மூலம் கிராமாபிவிருத்தி திட்டங்களும் நிரம்பத் தடைப்படுகின்றன.

புது அமைப்பின்படி தற்போதைய கதர் அபிவிருத்தித் திட்டத்துக்கு இதனால் இடைஞ்சல் ஏற்படுதால் இந்த முறையை கைவிடவேண்டியதைத் தவிர வேறு வழி யில்லை. இதற்கு நம்பிக்கையும் உற்சாகமும் தேவை. நம்பிக்கை ஒருபோதும் சோம்பலுக்கு இடம் அளிப்பதில்லை.

அத்தாட்சியைப் பெறாத கதர் வியாபாரிகள் கதர் உற்பத்திக்குப் பெரும் எதிரிகள். ஏழைத் தொழிலாளியின் நன்மைக்கும் அஹிம்சா தத்துவத்திற்கும் இது கெடுதல் தான்.

ஏனெனில், வியாபரிக்குப் பணம்தான் குறி. அவனுக்கு வேறு எதைப்பற்றியும் கவலை கிடையாது. அவன் ஏழை நெசவாளர்களிடம் சென்று அவர்களுக்கு உற்சாகமூட்டு முறையில் எல்லாவித மான வாக்குறுதியும் அளித்து விடுகிறான்.

அகில பாரத சர்க்கா சங்கம் அழிந்தால் தாங்களும் அழிந்து போக நேரிடும் என்பதைப்பற்றிச் சிறிதும் அவர்கள் சிந்திப்பதில்லை. இதில் ரொம்பவும் வருந்தத்தக்க விஷயம் என்னவெனில், காங்கிரஸ்காரர்களே அத்தாட்சி பெறாத போலிவியாபாரிகளின் வலையில் விழுந்து விடுவதுதான். போலி வியாபாரிகளின் சம்பந்தம் அவர்களுக்கு எப்போதும் இருந்துகொண் டிருக்கிறது. பொன் முட்டையிடும் வாத்துக்களைத் தெரிந்தோ தெரியாமலோ சாகடித்துக்கொண் டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் இதுவரை உணரவே யில்லை."

கதரியக்கத்தில் நம்பிக்கை யில்லை என்றால், பூரண சுயராஜ்யம் கொண்டுவரப் போகும் அஹிம்ஸா ஆயுதம் சர்க்காதான் என்பதிலும் அவர்களுக்கு நம்பிக்கையில்லை என்றால், இம்மாதிரி செய்வதற்கு அவர்களுக்குப் பூரண உரிமையுண்டு.

முக்கிய காங்கிரஸ் தலைவர்களைக் கலந்து அகில இந்திய சர்க்கா சங்கத்தின் கொள்கையை மாற்ற வேண்டும் என்று எனக்கு யோசனை கூறப்பட்டிருக்கிறது. இது இயற்கைக்கு முரணானது. அகில பாரத சர்க்கா சங்கமே காங்கிரஸ்காரர்களைக் கொண்டதுதான். காங்கிரஸ்காரர்களால் ஆரம்பிக்கப்பட்டதா யிருந்தாலும் சர்க்கா சங்கம் தனி உரிமைகள் கொண்ட தனிச் சங்கமாகும். காங்கிரஸ்காரர்களின் ஆதிக்கத்திலிருந்து அதை எந்த நிமிஷத்திலும் பிரிக்க முடியும் என்றாலும் காங்கிரஸ்காரர்கள் வசமிருக்கிறவரை சுயராஜ்யத்திற்கு ஏற்ற வகையில் அவர்கள் அதை உபயோகிப்பார்கள் என்பதில் நம்பிக்கை வைக்க வேண்டும்.

நூல் கொடுத்துக் கதர் வாங்குவது என்பது காங்கிரஸ்காரர்களுக்கு ஒரு பெரிய தொந்தரவான விஷய

மாகத் தோன்றுகிறது. அவர்களுக்கு உண்மையிலேயே கதர் அஹிம்சையின் சின்னம் என்பதில் நம்பிக்கை இருந்தால் நூல் கொடுத்தே கதர் வாங்க வேண்டும். நம்பிக்கை இல்லை என்றால் கட்டாயக் கதர் என்னும் விதியையே எடுத்து விடலாம்.

அத்துடன் கதர் இயக்கம் இதுவரை எத்தனையோ அக்னிப் பரீக்ஷைகளில் தேறி பொதுஜனங்களிடையே ஒரு மகத்தான நம்பிக்கையைப் பெற்றிருக்கிறது. பொதுஜனங்களிடம் நம்பிக்கை பெற்று பல காரியங்களைச் சாதிப்பதற்கும் இது ஒரு பெரிய சாதனமாகவுமிருக்கிறது. காரணம், கிராமங்களிலுள்ள லட்சக்கணக்கான மக்களிடையே கதருக்கு மிகுந்த மரியாதை ஏற்பட்டிருப்பதுதான்.

வேலை செய்பவர்கள் கடவுள் மீது பாரத்தைப் போட்டுவிட்டுத் தங்கள் நோக்கத்தில் முழு நம்பிக்கை வைத்துக் காரியம் செய்வார்களானால் பலவற்றைப்பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசியமே இல்லை.

ஸிம்லா, மோ. க. காந்தி.
3—5—'46.

## பண்பாட்டு மூலம் ஆக்கிரமிப்பும் ரோமன் லிபியும்

மத்திய இந்திய தேசிய இராணுவ நிவாரணக் கமிட்டியார் அந்த இராணுவத்தைச் சேர்ந்தவர்களுடைய உபயோகத்துக்காகச் செய்திப் பிரசுரம் ஒன்றை ரோமன் லிபியில் வெளியிட உத்தேசித்திருப்பதைக் குறித்து விவாதிப்பதற்காக ஆஜாத் ஹிந்த் (சுதந்திர இந்திய) அரசாங்கத்தைச் சேர்ந்த திரு. எஸ். ஏ. அய்யர் காந்தியடிகளிடம் வந்தார்.

அவர் கூறியது :—

"கமிட்டியார்க்கு ரோமன் லிபியிடம் மோகம் உண்டாய் விடவில்லை. அதை அவர்கள் தற்காலிக அவசியமாகக் கருதியே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த லிபி வேண்டாம் என்றால் ஹிந்தி, உருது, தமிழ் என்று மூன்று பாஷைகளில் அச்சடிக்க வேண்டியிருக்கும். அப்படிச் செய்தால் அதிகமாகப் பணம் செலவாகும். அத்துடன் ரோமன் லிபியைக் கையாள்வது புதிய வழக்கமுமன்று. அந்த லிபியானது வீரர்கள் இந்தியச்சேனையில் இருந்த காலத்தில் அறிந்து கொண்டதும் அதனால் தென் கிழக்கு ஆசியாவில் வேலை செய்தபோது கையாண்டதுமாகும்."

அதற்குக் காந்தியடிகள் கூறிய மறுமொழி :—

"ஆனால் இன்று நீங்கள் இருப்பது இந்தியாவில்; தென் கிழக்கு ஆசியாவிலன்று என்பதை மறந்துவிடுகிறீர்கள். இந்த வீரர்கள் என்றேனும் தங்கள் மனைவி மக்களுக்கு ரோமன் லிபியில் கடிதம் எழுதுகிறார்களா?"

திரு. எஸ். ஏ. அய்யர்:—

"இல்லை. அவர்கள் ஹிந்தி, உருது, தமிழ் முதலிய சுதேச லிபிகளிலேயே எழுதுகிறார்கள்."

காந்தியடிகள் :—

"அதன் பொருள் யாது? அவர்கள் எல்லோருக்கும ஏதேனும் ஒரு இந்திய லிபி தெரியும் என்பதே. நமக்கென்று ஒரு லிபி யில்லாதிருந்தால் தற்காலிகமாக ரோமன் லிபியை உபயோகித்துக் கொண்டால் பாதகமில்லை. ஆனால் இரண்டு லிபிகளுடைய ஹிந்துஸ்தானி பாஷைக்கு ரோமன் லிபியை எடுத்துக் கொள்வது என்பது இங்கிலீஷ்காரர் நம்மைத் தங்கள் நாகரிகத்தின் மூலம் ஆட்சி கொண்டதற்கே அறிகுறியாகும். உங்களை வெற்றி கொண்ட இங்கிலீஷ்காரர்களை வெல்லுவதற்காக நீங்கள் இங்கிலீஷ் உடையை, அதாவது தென்கிழக்கு ஆசியாவில் உங்கள் செய்திப் பிரசுரங்களுக்கு ரோமன் லிபியை ஏற்றுக்கொண்டீர்கள். ஆனால் நீங்கள் இந்த நாகரிக வெற்றிச் சின்னத்தை வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டு ரோமன் லிபிக்குப் பதிலாக இந்திய லிபிகள் இரண்டிலும் வெளியிடவேண்டும் என்று வற்புறுத்தியிருக்க வேண்டும்.

பிரிட்டிஷ் படைத்தலைவர்களும் வீரர்களும் நம்மை அரசாள்வதற்கு உபயோகமாக ஹிந்துஸ்தானியைக் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தபடியால் அவர்களுடைய உபயோகத்துக்காகவே ரோமன் லிபி ஆதியில் கையாளப்பட்டது. அவர்கள் உருது நெடுங்கணக்கிலுள்ள கஷ்டங்களை எல்லாம் நீக்குவதற்காக ரோமன் லிபியை உபயோகிக்கும் டைப் மெஷின்களையும் அச்சு மெஷின்களையும் காட்டி நம்மை மயக்கிவிட்டார்கள். அதைக் கண்டு நாமும் அவர்களுடைய வலையில் விழுந்துவிட்டோம். ஆனால் நாம் நம்முடைய அடிமைத் தளையை அறுத் தெறிய முனைந்து நிற்கும் இந்தச் சமயத்தில் இங்கிலீஷ்காரர் நம்மைத் தங்கள் பண்பாட்டின் மூலம் ஆட்சி கொண்டதன் சின்னத்தை மறுபடியும் கைக்கொள்ள நினைப்பது தவறு. நீங்கள் பிரிட்டிஷ் சேனையில் சேர்ந்திருந்த பொழுது அதிகமான சம்பளங்களும் பென்ஷன்களும் உயர்ந்த பட்டங்களும் பரிசுகளும் பெற ஆசைப்பட்டே ஊழியம் செய்து வந்தீர்கள். ஆனால் இப்பொழுதோ உங்களுக்கு அந்த ஆசைகள் இல்லை. நீங்கள் உங்கள் தேசத்தின் விடுதலைக்கும் கௌரவத்துக்குமாகவே சேவை செய்கின்றீர்கள். அதனால் நீங்கள் எளிதான வழியை நாடவில்லை.

இந்தியா அதி சீக்கிரத்தில் விடுதலை அடைந்துவிடும். ஹிந்துஸ்தானிக்கு இரண்டு லிபிகளுக்குப் பதிலாக ஒரே ஒரு லிபிதான் இருக்கக்கூடிய காலம் உடனேயே வந்துவிடும் என்று எண்ண வேண்டாம். நீங்களும் நானும் இரண்டு லிபிகளையும் அக்கரையுடன் கற்றுக்கொண்டால் மட்டுமே அந்தக் காலம் வந்து சேரும், அதற்கு முன்னதாக வராது. அதுதான் நாம் சுதந்திரத்துக்குக் கொடுக்கக் கூடிய குறைந்த பட்ச விலையாகும். தென் ஆப்பிரிக்காவில் எல்லாவற்றையும் இரண்டு பாஷையிலேயே தயாரிக்கிறார்கள். சர்க்கார் கெஜட்டும் அப்படித்தான்; பாடசாலைகளுக்கு உபயோகமான பாட புத்தகங்களும் அப்படித்தான். அப்படியிருந்தும் அந்த நாட்டைப் 'பிரித்துவிட்ட தென் ஆப்பிரிக்கா' என்று சொல்லாமல் 'தென் ஆப்பிரிக்க ஐக்கியநாடு' என்றே சொல்லுகிறார்கள். அந்த ஐக்கியத்தைப் பாதுகாப்பதற்காக மாகாணத்துக்கு ஒன்றாக நான்கு ராஜதானி நகரங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதுதான் சுதந்திரம் பெற்றதும் சுதந்திரத்தில் பற்றுள்ளதுமான ஜனங்களுடைய முறையாகும்."

திரு. அய்யர், காந்தியடிகள் கூறியதை ஏற்றுக்கொண்டு "ஆகவே நாங்களும் இனிமேல் ஹிந்துஸ்தானிச் செய்திப் பிரசாரத்தை ரோமன் லிபியில் தயாரிக்காமல் நாகரி லிபியிலும், உருது லிபியிலுமே தயாரிக்கின்றோம்" என்று கூறினார்.

புது டில்லி. பியாரிலால்.

அச்சடித்தவர்: பி. அருணாசலம், கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி.டி., சென்னை.
பிரசுரித்தவர் : ஸ்ரீராமன், தமிழ்ப்பண்ணை, தியாகராயநகர், சென்னை. நிர்வாக ஆசிரியர் : சின்ன அண்ணாமலை.